## 1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

முன்னிலை : **திருமதி.S.பொன் மெலிசா, B.A., LL.B.,**

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 23 ம் நாள் புதன்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.326/2023</u>**

CNR.No.TNTL06-000779-2022

ஆ.ஜான்தனராஜ் ... வாதி

//எதிர்//

1) ராணி
2) கண்ணன் ... பிரதிவாதிகள்

இந்த வழக்கு 17.07.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ஸ்ரீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், 1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.முத்துவேல் (எ) ராஜா ஆஜராகியிருந்த போதிலும், போதிய காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் 15.04.2024 ம் தேதியில் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 2 ம் பிரதிவாதி பொறுத்து வழக்கு 02.03.2024 ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையிலும், வாதி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களையும் ஆராய்ந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது, வாதிக்கு பிராதில் குறிப்பிட்டுள்ளபடி, பிராது காலம் வரைக்கான நிலுவைக்கடன் தொகை ரூ.48,373/-ம், அதன் பின்வட்டி 12% அடிப்படையில் முழுத்தொகை செலுத்தி முடிக்கும் காலம் வரை சேர்த்து பிரதிவாதிகள் செலுத்த உத்தரவிடக் கோரியும், வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு பிரதிவாதிகள் கொடுக்க உத்தரவிடக் கோரியும் உரிமையியல்

நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 1 ன் படி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:–**

வாதியோடு பிரதிவாதிகளுக்கு இருந்த நட்பின் அடிப்படையில் கடந்த 2007ம் ஆண்டு 1ம் பிரதிவாதிக்கு அவரது குடும்ப தேவைக்காக ரூ.50,000/– கடனாக தேவைப்படுவதாக 2ம் பிரதிவாதி கூறியதன் அடிப்படையில், வாதி, 1ம் பிரதிவாதியிடம் மேற்படி விபரத்தை கேட்டு அதனை 1ம் பிரதிவாதி ஒப்புக் கொண்டு, அதன்பேரில் 1ம் பிரதிவாதிககு 2ம் பிரதிவாதி முன்னிலையில், ரூ.50,000/– கடனாக கொடுத்து அதற்கு உரிய பணப்பற்று ரசீதும், 1ம் பிரதிவாதியிடமிருந்து வாதி பெற்றுக் கொண்டுள்ளார். அதில் 2ம் பிரதிவாதி சாட்சியாகவும், ஜாமீன்தாரராகவும் கையொப்பம் செய்துள்ளார். அதன்பின் 2010ம் ஆண்டு வாதிக்கு மேற்படி கடன் தொகை தேவைப்பட்டதால், வாதி, பிரதிவாதிகளை பலமுறை நேரில் அணுகி கோரியும், பிரதிவாதிகள் மேற்படி தொகையை திரும்ப செலுத்தாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார்கள். பிரதிவாதிகள் மாநகராட்சி ஊழியர்களாக பணியாற்றி வந்ததால், கடந்த 2011ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வாதி மேயர் அவர்களிடம் பிரதிவாதிகள் குறித்தும், கடன் விபரம் குறித்தும் புகார் அளித்ததின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி ரூ.10,000/– மட்டும் 2012 ஜனவரியில் திரும்ப செலுத்திவிட்டு, மீதி தொகையை விரைவில் செலுத்திவிடுவதாக கூறியுள்ளார். அதன்பின்னரும் பிரதிவாதிகள் மேற்படி தொகையை திரும்ப செலுத்ததால், வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். மேற்படி புகாரின் மீதான விசாரணையிலும், 1ம் பிரதிவாதி மேற்படி கடன் தொகையினை ஒப்புக் கொண்டு மாதம் ரூ.10,000/– வீதம் நான்கு மாத தவணைகளாக செலுத்திவிடுவதாக உறுதி அளித்து எழுதிக் கொடுத்துள்ளார். அதன்பின்னரும் பிரதிவாதிகள் மேற்படி தொகையை திரும்ப செலுத்தவில்லை. எனவே, வாதி மீண்டும் 13.09.2021ம் தேதியில் காவல்

நிலையத்திலும், 26.11.2021ம் தேதியில் திருநெல்வேலி மாநகர காவல் ஆணையாளரிடமும் புகார் அளித்துள்ளார். பிரதிவாதிகள் வேண்டுமென்றே வாதிக்கு பணத்தை திரும்பி செலுத்தாமல் இருந்து வருகின்றனர். எனவே, வாதிக்கு பிராதில் குறிப்பிட்டுள்ளபடி, பிராது காலம் வரைக்கான நிலுவைக்கடன் தொகை ரூ.48,373/-ம், அதன் பின்வட்டி 12% அடிப்படையில் முழுத்தொகை செலுத்தி முடிக்கும் காலம் வரை சேர்த்து பிரதிவாதிகள் செலுத்த உத்தரவிடக் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியிருந்த போதிலும், போதிய காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் 15.04.2024ம் தேதியில் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார். 2ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு 02.03.2024ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

4) **இந்நிலையில், வாதி பிராதில் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே இங்கு ஆய்வுக்குரிய பிரச்சனையாகும்.**

5) வாதி தரப்பில் வாதியான ஜான்தனராஜ் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7) கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர், வாதியோடு பிரதிவாதிகளுக்கு இருந்த நட்பின் அடிப்படையில் கடந்த 2007ம் ஆண்டு 1ம் பிரதிவாதிக்கு அவரது குடும்ப தேவைக்காக ரூ.50,000/- கடனாக கொடுத்து அதற்கு உரிய பணப்பற்று ரசீதும், 1ம் பிரதிவாதியிடமிருந்து வாதி பெற்றுக் கொண்டதாகவும், அதில் 2ம் பிரதிவாதி சாட்சியாகவும், ஜாமீன்தாரராகவும் கையொப்பம் செய்துள்ளதாகவும், அதன்பின் 2010ம் ஆண்டு வாதிக்கு மேற்படி கடன் தொகை

தேவைப்பட்டதால், வாதி, பிரதிவாதிகளை பலமுறை நேரில் அணுகி கோரியும், பிரதிவாதிகள் மேற்படி தொகையை திரும்ப செலுத்தாமல் காலம் தாழ்த்தி வந்ததாகவும், பிரதிவாதிகள் மாநகராட்சி ஊழியர்களாக பணியாற்றி வந்ததால், கடந்த 2011ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வாதி மேயர் அவர்களிடம் பிரதிவாதிகள் குறித்தும், கடன் விபரம் குறித்தும் புகார் அளித்ததின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி ரூ.10,000/- மட்டும் 2012 ஜனவரியில் திரும்ப செலுத்திவிட்டு, மீதி தொகையை விரைவில் செலுத்திவிடுவதாக கூறியதாகவும், அதன்பின்னரும் பிரதிவாதிகள் மேற்படி தொகையை திரும்ப செலுத்ததால், வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், மேற்படி புகாரின் மீதான விசாரணையிலும், 1ம் பிரதிவாதி மேற்படி கடன் தொகையினை ஒப்புக் கொண்டு மாதம் ரூ.10,000/- வீதம் நான்கு மாத தவணைகளாக செலுத்திவிடுவதாக உறுதி அளித்து எழுதிக் கொடுத்துள்ளதாகவும், அதன்பின்னரும் பிரதிவாதிகள் மேற்படி தொகையை திரும்ப செலுத்தவில்லை என்றும், வாதி தனது வழக்கினை தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்று ஆவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதாகவும், எனவே, வாதி பிராதில் கூறியுள்ள தொகையை பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த உத்தரவிட வேண்டுமென கட்சி செய்யப்பட்டுள்ளது.

8) பாரதிய சாக்ஷிய ஆதிநியம் சட்டத்தின் பிரிவு 104 ன் படியும் "actore incumbit onus probandi", "actore non probanate reus absolvitur" என்ற சட்டக்கோட்பாடுகளின் படியும், வாதியின் பிராதில் கூறியுள்ளபடி வாதியிடமிருந்து 1ம் பிரதிவாதி ரூ.50,000/- கடனாக பெற்றுள்ளார் என்பதையும், அதனை பிரதிவாதிகள் முறையாக செலுத்தவில்லை என்பதையும் முதல் ஏற்பாக நிரூபணம் செய்ய வேண்டிய சுமை இவ்வழக்கின் வாதிக்கு உள்ளது.

9) வாதியின் பிராதில் கண்ட சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் இவ்வழக்கின் வாதியான ஜான்தனராஜ் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய முதன்மை சாட்சியத்தில் பிராதில்

கூறியுள்ள சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம், 12.03.2021 தேதியிட்ட வாதி பாளையங்கோட்டை காவல் ஆய்வாளருக்கு வழங்கிய புகார் கையிருப்பு நகல் வா.சா.ஆ.1 ஆகவும், மேற்படி புகாருக்கு வழங்கப்பட்ட மனு ரசீது அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 15.07.2021 தேதியிட்டு வாதி வழங்கிய புகார் கையிருப்பு நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 13.09.2021 தேதியிட்ட வாதி வழங்கிய புகார் கையிருப்பு நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 26.11.2021 ம் தேதிய திருநெல்வேலி காவல் ஆணையருக்கு வாதி வழங்கிய புகார் கையிருப்பு நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 25.04.2022 ம் தேதிய வாதி தரப்பில் பாளையங்கோட்டை காவல் ஆய்வாளருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கிய மனு கையிருப்பு நகல் வா.சா.ஆ.6 ஆகவும், ஆய்வாளர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 முதல் 7 ஆவணங்கள் அனைத்தும் வாதி, பிரதிவாதிகள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்த புகார் மனு சம்மந்தமானவை ஆகும்.

10) மேலும், வாதி தனது பிராதில், வாதிக்கு பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த பணப்பற்று ரசீதின் அசல் தொலைந்துவிட்டதால், காவல் நிலையத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி பெற்ற ஆவணங்களை வைத்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணமானது வாதி கொடுத்த புகாரின் மீது காவல் நிலையத்தில் நடத்தப்பட்ட விசாணை சம்பந்தப்பட்ட ஆவணங்களாக உள்ளது. மேற்படி ஆவணத்தில், 1 ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்ததாக கூறப்படும் வாக்குமூலம் இணைக்கப்பட்டுள்ளது. அதில் 1 ம் பிரதிவாதி, வாதிக்கு மாதம் ரூ.10,000/— வீதம் நான்கு மாத தவணைகளில் ரூ.10,000/— கொடுத்துவிடுவதாக எழுதிக் கொடுத்ததாக உள்ளது. ஆனால், காவல் நிலையத்தில் கொடுக்கப்படும் வாக்குமூலத்தை உரிமையியல் வழக்குகளில் ஆவணங்களாக ஏற்றுக் கொள்ள இயலாது. மேலும், மேற்படி

வாக்குமூலத்தில் உள்ளது 1ம் பிரதிவாதியின் கையொப்பம் தான் என்பதை நிரூபிக்க வாதி தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. மேலும், வாதி தரப்பில் பிரதிவாதிகள் 2007ம் ஆண்டு டிசம்பர் ரூ.50,000/- கடனாக பெற்றதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் வாதி, பிரதிவாதிகள் மீது காவல் நிலையத்திலும் 2021ம் வருடத்தில் தான் புகார் மனு கொடுத்துள்ளார். அதற்கு முன்பாக வாதி மேற்படி கடன் தொகையை வசூல் செய்வதற்கு பிரதிவாதிகள் மீது எந்தவித சட்டப்படியான நடவடிக்கைகளும் எடுத்ததாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஒரு கடன் தொகையை திரும்ப வசூல் செய்ய பிரதிவாதிகளால் கடன் வாங்கப்பட்ட தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சுமார் 11 வருடங்கள் கழித்து 2021ல் தான் வாதியால் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், பிரதிவாதிகள் வாதிக்கு எழுதிக் கொடுத்ததாக கூறப்படும் பணப்பற்று ரசீதும் தொலைந்து விட்டதாக வாதி தரப்பில் கூறப்பட்டுள்ள நிலையில், அவ்வாறு பிரதிவாதிகள் வாதிக்கு பணப்பற்று ரசீது எழுதிக் கொடுத்துள்ளார் என்பதை நிரூபிக்க இரண்டாம் நிலை ஆவணங்களோ அல்லது சாட்சிகளோ வாதியால் இந்நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படவில்லை. எனவே, மேற்படி சங்கதிகளின் வாயிலாக பிரதிவாதிகள் வாதியிடம் ரூ.50,000/- கடனாக பெற்றதாக தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்று ஆவணங்களின் மூலம் வாதி நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11) இந்த வழக்கில் பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர்களாக இருந்தாலும் கூட வாதி தான் தனது வழக்கினை நியாயமான முறையில் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் நிரூபிக்க வேண்டும். ஆனால் மேலே விவாதிக்கப்பட்ட சங்கதிகளின் அடிப்படையில், வாதி அவ்வாறு தனது வழக்கினை நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, வாதி பிராதில் கோரியுள்ள பரிகாம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என

இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு ஜூலை மாதம் 23–ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PON MELISA S

Digitally signed by PON MELISA S
Date: 2025.07.23 17:33:56 +0530

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருநெல்வேலி

1) <u>வாதி தரப்பு சாட்சி:–</u>

வா.சா.1 –ஜான்தனராஜ் (வாதி)

2) <u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 – | 12.03.2021 தேதியிட்ட வாதி பாளையங்கோட்டை காவல் ஆய்வாளருக்கு வழங்கிய புகார் கையிருப்பு நகல் |
| வா.சா.ஆ.2 – | புகாருக்கு வழங்கப்பட்ட மனு ரசீது அசல். |
| வா.சா.ஆ.3 – | 15.07.2021 தேதியிட்டு வாதி வழங்கிய புகார் கையிருப்பு நகல் |
| வா.சா.ஆ.4 – | 13.09.2021 தேதியிட்ட வாதி வழங்கிய புகார் கையிருப்பு நகல் |
| வா.சா.ஆ.5 – | 26.11.2021 ம் தேதிய திருநெல்வேலி காவல் ஆணையருக்கு வாதி வழங்கிய புகார் கையிருப்பு நகல். |
| வா.சா.ஆ.6 – | 25.04.2022 ம் தேதிய வாதி தரப்பில் பாளையங்கோட்டை காவல் ஆய்வாளருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கிய மனு கையிருப்பு நகல் |
| வா.சா.ஆ.7 – | ஆய்வாளர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை அசல். |

வா.சா.ஆ.8 – வாதிக்கு வழங்கப்பட்ட தகவல் அசல்

3) <u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:–</u> இல்லை

PON MELISA S Digitally signed by PON MELISA S Date: 2025.07.23 17:34:02 +0530

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருநெல்வேலி

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி
அ.வ.எண்.326/2023
சீரான / வரைவு – தீர்ப்புரை
23.07.2025